உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
நாள் :06.10.2025
அ.சா.3 – தீபன் சக்கரவர்த்தி S/o. செல்வமணி
S.C. No. 71/2024

(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

எங்களை தாக்கியதாக சொல்லப்ட்ட பிறகு மருத்துவமனையில் இருந்து ஆஜர் எதிரிகள் தோப்பிற்கு சென்று அங்கு ஆஜர் எதிரிகள் குடும்பத்தாரை தாக்க முற்படும் போது அ.சா.2 அவரது சகோதரியான கருப்பாயியை தாக்கியதாக எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் தாக்க முற்பட்ட போது, வைத்திருந்த ஆயுதங்களை கொண்டு அ.சா.1 ஆன என் சகோதரர் சரவண குகன் அவரது தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 சரவணகுகன் உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றும் அது இல்லை என்பதால் தான் மறுநாள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் நாளே காவல்நிலையத்திற்கு என் தந்தை சென்றார். புகாரை கொட்டாம்பட்டி காவல்நிலையத்தார் முதலில் எடுக்கவில்லை. அதன்பிறகு மருத்துவமனை சென்றுவிட்டோம், நான் தான் சரவணகுகன் உடன் சென்றேன். 11.01.2023 அன்று புகார் வாக்குமூலம் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆஜர் எதிரிகளால் அ.சா.1 தாக்கப்படவில்லை என்றும், நாங்கள் ஆஜர் எதிரிகளை தாக்க முற்படும் போது ஏற்பட்ட காயத்தை தவறாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது முதல் நாள் அன்று. செல்வேந்திரன் தான் அ.சா.1 சரவணகுகனை அரிவாளை கொண்டு தலையில் வெட்டினார். வெற்றிவேந்தன் அ.சா.1 சரவணகுகனை கையை பின்னால் இறுக்க கட்டிகொண்டார். செல்வேந்திரன் தான் அ.சா.1ஐ தலையில் வெட்டினார். நான் வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றம் அ.சா.1ஐ ஆஜர் எதிரிகள் தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்குக்கும் சம்பந்தமில்லை என்று அவர்கள் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகபொய்வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.10.06 20:45:53 +0530

Assistant Sessions Judge

Melur